# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100


www.tamiledc.com

Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. அழகு தமிழால் இசைநுணுக்கம் பற்றிக் கூறும் நூல்

அ ) திருக்குறள் ☐ ஆ ) நாலடியார் ☐
இ ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) மூதுரை ☐

2. தமிழ் + ஏடு

அ ) தமிழ்ஏடு ☐ ஆ ) தமிழேடு ☐
இ ) தமிழெடு ☐ ஈ ) தமிழோடு ☐

3. உயிர்க்குறில் எழுத்துகள்

அ ) 7 ☐ ஆ ) 12 ☐
இ ) 18 ☐ ஈ ) 5 ☐

4. உழுகின்றார்கள் என்பது

அ ) பலர்பால் ☐ ஆ ) பலவின்பால் ☐
இ ) பெண்பால் ☐ ஈ ) ஒன்றன்பால் ☐

5. அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னன்

அ ) கயிலைவன்னியன் ☐ ஆ ) இராவணன் ☐
இ ) எல்லாளன் ☐ ஈ ) பண்டாரவன்னியன் ☐

6. ஒன்றாகத் திரண்டால் வலிமை பெறும் கொடி

அ ) முல்லைக்கொடி ☐ ஆ ) மல்லிகைக்கொடி ☐
இ ) தாமரைக்கொடி ☐ ஈ ) அடம்பன்கொடி ☐

7. உழவன் தாகத்தினால் நீரை ______________ எனக் குடித்தான்.

அ ) படபட ☐ ஆ ) மடமட ☐

இ ) கடகட ☐ ஈ ) தடதட ☐

8. **கூறு** என்ற வினையடியைப் பெயரெச்சமாக மாற்றினால்

அ ) கூறினார் ☐ ஆ ) கூறினான் ☐

இ ) கூறிய ☐ ஈ ) கூறி ☐

9. நண்பர் என்ற சொல்லின் எதிர்ச்சொல்

அ ) பகைவர் ☐ ஆ ) தோழர் ☐

இ ) உறவினர் ☐ ஈ ) மறவர் ☐

10. வண்டுகள் பூவில் தேனை உறிஞ்சிக் குடித்தன. இதில் வந்துள்ள செயப்படுபொருள்

அ ) குடித்தன ☐ ஆ ) பூவில் ☐

இ ) தேனை ☐ ஈ ) வண்டுகள் ☐

11. கயிலைவன்னியன் காலத்தில் வன்னி __________ பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

அ ) எட்டு ☐ ஆ ) ஆறு ☐

இ ) ஐந்து ☐ ஈ ) ஏழு ☐

12. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர்

அ ) கந்தரோடை ☐ ஆ ) ஆனையிறவு ☐

இ ) நவாலி ☐ ஈ ) பரந்தன் ☐

13. உழவர் ஏர்பூட்டி வயல்களை உழும்போது சேற்றிலிருந்து மிதந்தவை

அ ) இளநீர்கள் ☐ ஆ ) பாக்குகள் ☐

இ ) சுறாக்கள் ☐ ஈ ) சங்குகள் ☐

14. மக்கள் மாவீரர் துயிலுமில்லத்திற்குத் ____________ ச் சென்று வணங்கினர்.

அ ) மணிமணியாக ☐ ஆ ) திரள்திரளாக ☐

இ ) அடுக்கடுக்காக ☐ ஈ ) பக்கம்பக்கமாக ☐

15. வீரமாமுனிவர் எழுதிய நூல்

அ ) தேம்பாவணி ☐ ஆ ) நல்வழி ☐

இ ) புறநானூறு ☐ ஈ ) இருண்டவீடு ☐

16. ஓர் எழுவாய் ஒரு பயனிலையைப் பெற்று வருவது

அ ) கூட்டுச்சொல்லியம் ☐ ஆ ) வியப்புச்சொல்லியம் ☐

இ ) கலப்புச்சொல்லியம் ☐ ஈ ) தனிச்சொல்லியம் ☐

17. உண்கிறாள் இதில் வந்துள்ள இடைநிலை

அ ) த் ☐ ஆ ) கின்று ☐

இ ) கிறு ☐ ஈ ) ப் ☐

18. போர்க்களத்தில் கொட்டும் முரசு

அ ) மணமுரசு ☐ ஆ ) பறைமுரசு ☐

இ ) கொடைமுரசு ☐ ஈ ) போர்முரசு ☐

19. ஒழுக்கம் இல்லாதவனிடம்__________ இருக்காது என வள்ளுவர் கூறுகின்றார்.

அ ) பணம் ☐ ஆ ) செல்வம் ☐

இ ) உயர்வு ☐ ஈ ) கல்வி ☐

20. வேரில் பழுக்கும் பழம்

அ ) மாம்பழம் ☐ ஆ ) கொய்யாப்பழம் ☐

இ ) வாழைப்பழம் ☐ ஈ ) பலாப்பழம் ☐

21. துளைக்கருவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) கைத்தாளம் ☐ ஆ ) புல்லாங்குழல் ☐

இ ) மேளம் ☐ ஈ ) வயலின் ☐

22. அநுராதபுரம் சென்றடைந்தபோது அங்கு தமிழர் செறிந்து வாழ்ந்தனர் எனக் கூறிய ஆங்கிலேயர்

அ ) தோமசுவான்றி ☐ ஆ ) றொபேட்நொக்சு ☐

இ ) வொன்றிபேக் ☐ ஈ ) யே.பி.லூயிசு ☐

23. ஆடுதல் என்பது

அ ) பொருட்பெயர் ☐ ஆ ) சினைப்பெயர் ☐

இ ) தொழிற்பெயர் ☐ ஈ ) குணப்பெயர் ☐

24. வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த இடம்

அ ) கண்டி ☐ ஆ ) நல்லூர் ☐

இ ) திண்டுக்கல் ☐ ஈ ) பாஞ்சாலங்குறிச்சி ☐

25. நீ அங்காடிக்குச் சென்று பழங்களை வாங்கி வா! இச்சொல்லியம்

அ ) ஏவல் ☐ ஆ ) வினா ☐

இ ) கூற்று ☐ ஈ ) மெய்ப்பாடு ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கதிரவன் தன் பொற்கதிர்களைச் சுருக்கிக் கொள்ளும் நேரம் அந்திப்பொழுது என அழைக்கப்படுகின்றது. அப்பொழுது மேற்குத் திக்கில் கதிரவன் மறையும். புள்ளினங்கள் அதிகாலையில் இரை தேடத் தொலைதூரம் செல்லும். அவை மாலையில் வீடு திரும்பும். வயல்களில் கடினமாக உழைத்த உழவர்கள் வேலைகளை முடித்துவிட்டு கலப்பைகளைத் தோள்களில் சுமந்தவாறு தத்தமது வீடுகளை நோக்கி நடப்பர். பகல் முழுவதும் கதிரவன் உலகைச் சுட்டெரிக்கும். கதிரவன் மறையும் நேரத்தில் வெம்மை தணிந்து குளிர் பரவத் தொடங்கும். நாள் முழுவதும் இரைச்சலுடனும் ஆரவாரத்துடனும் இருந்த இடங்கள் ஆரவாரமின்றிக் காணப்படும் . இருள் சூழும் வேளையில் மக்கள் வீட்டுக்குள் அமைதியாக இருப்பர்.

1. எவை அதிகாலையில் இரைதேடத் தொலைதூரம் செல்லும்?

_______________________________________________

_______________________________________________

2. கதிரவன் தன் பொற்கதிர்களைச் சுருக்கிக் கொள்ளும் நேரம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

_______________________________________________

_______________________________________________

3. பகல் முழுவதும் கதிரவன் எதைச் சுட்டெரிக்கும்?

_______________________________________________

4. எப்போது மக்கள் வீட்டுக்குள் அமைதியாக இருப்பர்?

_______________________________________________

5. கதிரவன் மறையும் திக்கு எது?

_______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. கயிலைவன்னியன் ஆண்ட வன்னிப்பகுதியின் பெயர் என்ன?

2. திருக்குறளின் வேறு பெயர்கள் இரண்டு தருக.

3. அன்னப்புள்ளின் கற்சிலை எங்கே அமைந்துள்ளது?

4. வன்னியில் பெருமளவு பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம் எது?

5. சிவப்பிரகாச அடிகளாரால் சினத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது எது?

6. “தமிழுக்குத் தொண்டு செய்தால் - அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம்...”

   இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

7. நுண்கலைகளில் இரண்டைத் தருக.

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

# இன்சொல்

| | | | | |
|---|---|---|---|---|
| சொற்கள் | வாடிடும் | கசந்திடும் | பேசிடின் | நெஞ்சம் |

அழகு முல்லை அரும்பிதழ்

அவிழ மணம் கமழுமே!

பழகு தமிழில் ________________

அமிழ்தாய் என்றும் இனிக்குமே

பிறரின் ________________ புண்படப்

பேசுகின்ற போதிலே!

உறவு கெட்டுப் போய்விடும்

உள்ளம் அதனால் ________________

கனியை விட்டுக் ________________

காயை வீணின் கடிப்பதோ?

இனிய ________________ இருக்கையில்

இழிந்த சொல்லை உரைப்பதோ?

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

வயலில் நெற்பயிர்கள் பச்சைப்பட்டாடை விரித்தாற் போல காட்சி தருகின்றன. காலைநேரம் கதிரவனின் ஒளி எங்கும் பரவத் தொடங்குகிறது. சில்லெனக் காற்று வீசுகின்றது. பறவைகள் கூட்டிலிருந்து பறந்து செல்கின்றன. ஆவினங்கள் கூட்டங்கூட்டமாகப் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன.

1. காலப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

2. புற்றரை என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

_______________________________________________

3. வினையெச்சம் ஒன்று எழுதுக.

_______________________________________________

4. நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக.

_______________________________________________

5. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.**

சினைப்பெயர் ____________________

பொருட்பெயர் ____________________

குணப்பெயர் ____________________

புள்ளிகள் 03

**இ. பின்வரும் நிரற்கூட்டை நிறைவு செய்க.**

| வினைமுற்று | பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|---|
| நடந்தான் | | |
| கூறுங்கள் | | |

புள்ளிகள் 02

**6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. கோடைகாலத்தில் பயிர்கள் நன்றாக ____________________ ந்ததால் கூலங்களின் ____________________ குறைந்துள்ளது.
   ( விலை, விளை )

2. தேன்மொழி கடற் ____________________ யில் இருந்து விளையாடியதால் சட்டையில் ____________________ படிந்தது.
   ( கறை, கரை )

3. முகிலன் கடும் ____________________ காரணமாக நேற்று அலுவலகப் ____________________ க்குச் செல்லவில்லை.
   ( பணி, பனி )

4. ____________________ விரிந்த வானத்தில் காகங்கள் ____________________ சென்றன.
   ( பறந்து, பரந்து )

5. அகரன் நாள்தோறும் ____________________ உண்டான். அதனால் அவன் ____________________ உள்ளவனாக இருக்கின்றான்.
   ( பலம், பழம் )

புள்ளிகள் 05

**7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நாங்கள் எமது பெற்றோரை மதிக்க வேண்டும். அவர்கள் கடினமாக உழைத்து எங்களை வளர்க்கின்றார்கள். அப்பா பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வேலைக்குச் செல்கின்றார். அம்மா வீட்டு வேலைகளைச் செய்கின்றார். அத்துடன் அவர் பள்ளிப் பாடங்கள் செய்வதற்கும் எமக்கு உதவுகின்றார்.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, பழமொழிகளைப் பொருத்தமாக எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| காரம் | உண்டு | இக்கரை | துரும்பும் | போனாலும் |

1. சிறு ______________________ பல்லுக்குத்த உதவும்.

2. இரக்கப் ______________________ சிறக்கப் போ!

3. ஒன்று பட்டால் ______________________ வாழ்வு.

4. அக்கரை மாட்டுக்கு ______________________ பச்சை.

5. கடுகு சிறிதானாலும் ______________________ பெரிது.

புள்ளிகள் 05

## 9) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.

1. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலார்

   ____________________ ரேனு மிலர்

   ( உன்னுடைய, என்னுடைய, அவனுடைய )

2. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

   ____________________ சொல்லிழுக்குப் பட்டு

   ( நாகாப்பர், யாகாப்பர், சோகாப்பர் )

புள்ளிகள் 05

**10) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தமிழிசை
- தலையைக்காத்த தமிழ்
- நீர் கலந்து கொண்ட நண்பன்/ நண்பியின் பிறந்தநாள் விழா.
- எனது தமிழ்ப்பள்ளி

புள்ளிகள் 15